**அக்டோபர் – 17**

# TNPSC துளிகள்

- கொல்கத்தாவில் உள்ள தி வெஸ்டின், ராஜர்ஹட்டில் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 முதல் 18 ஆம் தேதி வரை 19 வது உலக சுடோகு சாம்பியன்ஷிப் மற்றும் 33 வது உலகப் புதிர் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெறுகின்றன.
- பார்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் நிறுவனரும் தலைவருமான சுனில் பார்தி மிட்டலுக்கு பிரான்சின் 'நைட் ஆஃப் தி நேஷனல் ஆர்டர் ஆஃப் தி லெஜியன் ஆஃப் ஹானர்' விருது வழங்கப்பட்டது.
- உள்ளூரிலேயே எரிபொருளை உற்பத்தி செய்வதற்கும் இறக்குமதியைக் குறைப்பதற்கும் டோர்னோகோபி மாகாணத்தில் உள்ள அல்தான்ஷிரீ சௌம் பகுதியில் மங்கோலியாவின் முதல் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு இந்தியா அளித்த ஆதரவிற்கு மங்கோலிய அதிபர் உக்னகீன் குரேல்சுக் நன்றி தெரிவித்தார்.
- உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியில் உள்ள ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்திரத்திற்கு 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 10 அன்று 'சரியான வழிபாட்டுத் தலத்தில் உணவருந்துதல்' (Eat Right Place of Worship) என்ற முன்னெடுப்பின் கீழ் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) சான்றிதழ் வழங்கப் பட்டது.
    - இந்த முன்னெடுப்பானது மத நிறுவனங்களில் பிரசாதம் மற்றும் அன்னதானம் தயாரித்து விநியோகிக்கும் போது உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துகிறது.
- தமிழ்நாட்டின் நெல்லை வனவிலங்கு சரணாலயத்தின் மலைச் சரிவுகளில் இந்தியத் தாவரவியல் ஆய்வகத்தின் தாவரவியலாளர்களால் செரோபெஜியா தமிழ்நாடுயென்சிஸ் (Ceropegia tamilnaduensis) என்ற புதிய தாவர இனம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
    - நெல்லை வனவிலங்கு சரணாலயம் 2015 ஆம் ஆண்டில் வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்ட இதில் சிவகிரி மலை (1,748 மீ) உட்பட 29 மலைச் சிகரங்களைக் கொண்டுள்ளது.
- பசி, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான உணவிற்கான அணுகல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 அன்று உலக உணவு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Innovate today. Nourish tomorrow என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சாதி இடஒதுக்கீடு குறித்த உச்ச நீதிமன்ற வழக்கு தள்ளுபடி

- பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் இருந்து இஸ்லாத்திற்கு மாறுபவர்களுக்கான இட ஒதுக்கீடு சலுகைகள் தொடர்பான தமிழ்நாடு அரசின் மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாத்திற்கு மாறுவதன் மூலம் தானாகவே அறிவிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சமூகத்தின் உறுப்பினராகி விட முடியாது.

- ஒரு நபரின் முந்தைய மதம் மற்றும் சாதி அடையாளத்தின் அடிப்படையில் அரசியலமைப்பின் 16(4) வது சரத்து தானாகவே இடஒதுக்கீடுச் சலுகைகளை நீட்டிக்காது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- பட்டியலிடப்பட்ட சாதியினரை அறிவிக்க அரசியலமைப்பின் 341 வது சரத்து குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது; அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதியினர்) ஆணை, 1950 இன் கீழ், பட்டியலிடப்பட்ட சாதி அந்தஸ்து இந்து மதம், சீக்கிய மதம் அல்லது புத்த மதத்தை பின்பற்றுபவர்களுக்கு மட்டுமே என வரையறுக்கப் பட்டுள்ளது.
- ஜமாத் மதமாற்றச் சான்றிதழ் மட்டுமே சட்டபூர்வமான பிற்படுத்தப்பட்ட வகுப்பு உறுப்பினராக இருப்பதை நிறுவாது; தமிழ்நாடு அரசின் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத ஆணை நிராகரிக்கப்பட்டது.




## தமிழ்நாடு குறைக்கடத்தி சூழலமைப்புத் திட்டம் 2026




- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் 'தமிழ்நாடு குறைக்கடத்தி சூழலமைப்புத் திட்டம் 2026' ஐத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் ஒரு முன்னணி குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல்

உற்பத்தி மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கும் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது மத்திய அரசின் குறைக்கடத்தி திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு கூடுதல் சலுகைகள் மற்றும் தமிழ்நாட்டின் குறைக்கடத்தி சூழலமைப்பிற்கு முக்கியமான பிற தகுதியான திட்டங்களுக்கான ஆதரவு என இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 2026 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய அரசின் செமிகான் இந்தியா திட்டம் 2.0 க்கு (Semicon India Programme 2.0) துணையாக இருக்கும்.
- செமிகான் இந்தியா 2.0 திட்டமானது சிப்/சில்லு வடிவமைப்பு, செதில் உருவாக்கம், உபகரணங்கள், மூலப்பொருட்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட குறைக்கடத்தி மதிப்புச் சங்கிலியில் கவனம் செலுத்துகிறது.

# தேசியச் செய்திகள்

## பாரத் ஸ்டேஜ் VII விதிமுறைகள்




- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் பயணிகள் கார்களுக்கான BS-VII உமிழ்வுத் தரநிலைகளை அறிமுகப் படுத்த முன்மொழிந்துள்ளது.
- இந்தத் தரநிலைகள் கடுமையான வெளியேற்ற-உமிழ்வு வரம்புகள், நிஜ உலக ஓட்டுநர் சோதனைகள் மற்றும் உள்-உமிழ்வுக் கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் வாகன மாசுபாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இதன் செயலாக்கமானது வெளியேற்ற உமிழ்வுகள், பிரேக் துகள்கள், டயர் தேய்மானம் மற்றும் மின்கல நீடித்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கி ஏப்ரல் 2029, ஏப்ரல் 2031 மற்றும் ஏப்ரல் 2035 என மூன்று கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த விதிகளானது பெட்ரோல், டீசல், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), எத்தனால் கலந்த எரிபொருள்கள், ஹைட்ரஜன், கலப்பின மற்றும் மின்சார வாகனங்களை உள்ளடக்கியது; மின்சார வாகன மின்கலங்கள் 5 ஆண்டுகளுக்கு அல்லது 100,000 கி.மீ வரை குறைந்தபட்சம் 75% செயல்திறனைத் தக்கவைக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல் வாகன பாஸ்போர்ட்/சீட்டு வாகன உமிழ்வு, எரிபொருள் நுகர்வு மற்றும்

மின்கலன் ஆரோக்கியம் பற்றிய தகவல்களை வழங்கும்; இந்தியா தற்போது BS-VI தர நிலைகளைப் பின்பற்றுகிறது, இது நாடு முழுவதும் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## தெற்கு இந்தியப் பெருங்கடல் மீன்பிடி ஒப்பந்தம்

- தெற்கு இந்தியப் பெருங்கடல் மீன்பிடி ஒப்பந்தத்தில் (SIOFA) இந்தியா இணைவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2006 ஆம் ஆண்டு ஜூலை 7 அன்று ரோமில் கையெழுத்திடப்பட்ட இது, தெற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள மீன்பிடி வளங்களைப் பாதுகாக்கவும், நிலையான முறையில் பயன்படுத்தவும் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைமுறைக்கு வந்தது.
- கடல் சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UNCLOS) கீழ் அதிகம் இடம்பெயரும் உயிரினங்களைத் தவிர்த்து மீன்கள், மெல்லுடலிகள், ஓட்டுடைய கணுக்காலிகள் மற்றும் பிற உறைவிட உயிரினங்களை இது உள்ளடக்கியது.
- தரப்பினரின் கூட்டம், அறிவியல் குழு மற்றும் செயலகம் ஆகியவை இதன் முக்கிய அமைப்புகளாகும்.
- இந்தியா இதில் இணைவதானது முடிவெடுப்பதில் முழுப் பங்கேற்பு, அறிவியல் தரவுகள் மற்றும் ஆராய்ச்சிக்கான அணுகல் மற்றும் இந்திய மீனவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு புதிய மீன்பிடி வாய்ப்புகளைச் சாத்தியமாக்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி

- ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 66.8% ஐ வழங்கியுள்ளன.
- ரஷ்யா 44.3% (84.8 லட்சம் டன்கள்) வழங்கியது, அதே சமயம் ஐக்கிய அரபு அமீரகம் 17.4% (33 லட்சம் டன்கள்) மற்றும் அமெரிக்கா 5.1% (9.7 லட்சம் டன்கள்) வழங்கின.
- இந்தியா 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 191.2 லட்சம் டன் எண்ணெயை

இறக்குமதி செய்துள்ளது, அதே நேரத்தில் அதன் எண்ணெய் இறக்குமதிச் செலவு 12.2 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது, இது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தை விட கிட்டத்தட்ட 25% அதிகமாகும்.

- ரஷ்யாவின் பங்கு ஜூலையில் 51% ஆக இருந்து 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 44.3% ஆகக் குறைந்தது; அமெரிக்க எண்ணெய் இறக்குமதி ஜூலை மாதத்தில் இருந்து கிட்டத்தட்ட 82% உயர்ந்துள்ளது, அதே நேரத்தில் மாற்று விநியோக வழிகளுக்கு மத்தியில் ஐக்கிய அரபு அமீரகத்தின் இறக்குமதி அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் மொத்த எண்ணெய் இறக்குமதிச் செலவில் இந்த மூன்று நாடுகளின் பங்கு 67.8% ஆகும்; அனைத்து இறக்குமதிகளுக்கும் ஒரு டன்னுக்கு சராசரியாக $640 என்ற நிலையுடன் ஒப்பிடுகையில், அமெரிக்க எண்ணெய் ஒரு டன்னுக்கு சராசரியாக $810.6 செலவாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பசிபிக் பெருங்கடலில் எல் நினோ




- ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர்நிக்கஸ் பருவநிலை மாற்றச் சேவையானது, பசிபிக் பெருங்கடலின் நினோ 3.4 பிராந்தியத்தில் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர்

மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 29.70°C ஐ எட்டியதாகப் பதிவு செய்துள்ளது.

- இந்த வெப்பநிலையானது 1982-83, 1997-98 மற்றும் 2015-16 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வலுவான எல் நினோ நிகழ்வுகளின் போது பதிவான உச்ச அளவுகளைத் தாண்டியது.
- எல் நினோ என்பது ஒரு இயற்கையான பருவநிலை வடிவமாகும், இது மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் பெருங்கடலை வெப்பமாக்கி, உலகளாவிய மழைப் பொழிவு மற்றும் வானிலை அமைப்புகளை மாற்றுகிறது.
- இது வறட்சி, வெள்ளம், அதிக வெப்பம் மற்றும் பயிர் இழப்பு ஆகியவற்றின் அபாயத்தை அதிகரிக்கும்.
- உலகளாவிய சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலை செப்டம்பர் மாதத்தில் 21.05°C என்ற உச்சத்தை எட்டியது, அதே நேரத்தில் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமானது உலகில் இதுவரை பதிவான இரண்டாவது வெப்பமான செப்டம்பர் மாதமாகும்.
- தற்போதைய எல் நினோ விதிவிலக்காக வலுவானது, ஆனால் இதுவரை பதிவு செய்யப் பட்டவற்றிலேயே மிக வலிமையானது என்று இன்னும் உறுதிப்படுத்தப் பட வில்லை என கோப்பர்நிக்கஸ் தெரிவித்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## உல்லாஸ் (ULLAS) திட்டம் - லட்சத்தீவு




- கவரத்தியில் நிர்வாகி பிரபுல் படேல் அவர்களால் லட்சத்தீவு 100% கல்வியறிவு பெற்ற ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- இந்த சாதனை வயது வந்தோர் கல்விக்கான மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமான ULLAS (சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வாழ்நாள் கற்றல் பற்றிய புரிதல்) - நவ பாரத் சாக்சரதா காரியக்ரம் என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- அடையாளம் காணப்பட்ட 1,113 வயது வந்த படிப்பறிவில்லாத கற்பவர்கள் அனைவரும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் மதிப்பீட்டு தேர்வில் (FLNAT) தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- முறையான பள்ளிக் கல்வியைத் தவறவிட்ட 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வந்தோரை உல்லாஸ் திட்டம் இலக்காகக் கொண்டு, அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் முக்கியமான வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துகிறது.

- 7 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் வழக்கமான கல்வியறிவு அளவீட்டைப் போலல்லாமல், இந்த சாதனை உல்லாஸ் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட தகுதியான கற்பவர்களின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் 2026 - அக்டோபர் 15

- இந்த தினமானது கிராமப்புற பெண்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பதையும், அவர்களின் உரிமைகள், பொருளாதார அதிகாரமளித்தல், சுற்றுச்சூழல் தலைமை மற்றும் வளங்களுக்கான சமமான அணுகலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Rural Women Farmers Caring for Mother Nature என்பதாகும்.
- இது விதை பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு, நீர் மேலாண்மை மற்றும் நிலச் சீரமைப்பு ஆகியவற்றில் கிராமப்புற பெண்களின் பங்கை அங்கீகரிக்கிறது.
- நிலம், நீர், நிதி, சந்தைகள், தொழில்நுட்பம், விவசாய சேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான சமமான அணுகலுக்கு இது அழைப்பு விடுக்கிறது.
- 2026 ஆம் ஆண்டானது பெண் விவசாயிகளின் சர்வதேச ஆண்டாகும், இது கிராமப்புற பெண்களின் உரிமைகள் மற்றும் தலைமையை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.




# இதரச் செய்திகள்

## சீனாவில் ராட்சத பூஞ்சை கண்டுபிடிப்பு

- அறிவியலாளர்கள் சீனாவின் யுன்னான் மாகாணத்தில் டியான்ஜுனஸ் ரெக்ஸ் (Dianjunus rex - D-rex) என்ற ராட்சத பூஞ்சையைக் கண்டுபிடித்தனர்.
- இது 50 செ.மீ உயரம் வரையிலும், 2.2 கிலோ எடை வரையிலும் வளரக்கூடியது, இது அஸ்கோமைகோட்டா (Ascomycota) என்ற பூஞ்சைத் தொகுதியில் அறியப்பட்ட மிகப்பெரிய பூஞ்சை அமைப்பாகும்.
- இது சைலேரியல்ஸ் (Xylariales) வரிசையின் கீழ் ஒரு புதிய இனம், பேரினம் (Dianjunus)

மற்றும் குடும்பத்தை (Dianjunaceae) குறிக்கிறது.

- ❖ க்ரிட்டேசியஸ்-பாலியோஜீன் (Cretaceous–Paleogene) பேரழிவிற்குப் பிறகு, சுமார் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இதன் குடும்பம் தோன்றியதாக மரபணு பகுப்பாய்வு மதிப்பிடுகிறது.
- ❖ இது மரத்தாலான வேர்களில் வளர்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★